DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 131/2023 Crime No. 134/2021 Station Kelamangalam PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw13 /Pw5/ S.Parthipan | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**05.08.2025.**

**1, 4, 5, 7, மற்றும் 8 வது எதிரிகள் ஆஜர் . 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. (6 வது எதிரி இறந்துவிட்டார்) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது காரியமங்கலம் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 11.06.2021 ம் தேதி கெலமங்கலம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தேன்கனிக்கோட்டை வட்டம், கெலமங்கலம் செந்தில் நகரை சேர்ந்த அம்பலவானன் மகன் முருகன் (எ) அருள்வானன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று கெலமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.134/2021 இ.த.ச.392 உ/இ.397 என்று வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையில் அசலையும், வாதியின் புகாரின் அசலையும், குற்றவியில் நீதித்துறை தேன்கனிக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காகவேண்டியும் இராயக்கோட்டை வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். நான் பெற்ற புகார் **அ.த.சா.ஆ.10** ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும்.

**குறுக்கு விசாரணை 1 முதல் 5 எதிரிகள் தரப்பில்**

சம்பவம் 10.06.2021 ம் தேதியில் புகாரில் 12.30 மணிக்கு நடந்ததாக புகாரில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 1 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து 11.06.2021 ம் தேதி 11.00 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் எவ்வளவு நாள் கெலமங்கலத்தில் பணி செய்தேன் என்றால் 1 ½ வருடம் பணி செய்தேன். புகார் தாரர் மீது கெலமங்கலம் காவல் நிலையத்தில் 3 குற்ற எண்ணில் அவர்கள் எதிரிகளாக இருக்கிறார் என்றால் இருக்கலாம். நடக்காத சம்பவத்திற்கு எங்களிடம் இருக்கும் நபரை வைத்து காவல் நிலைய புள்ளிவிவர கணக்கிற்காக நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரையும், முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு 12.06.2021 ம் தேதி இரவு 9.30 மணிக்கு தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்று சொன்னால் சரிதான். புகார் தாமதமகா அனுப்பியதற்கு என்ன காரணம் என்றால் நான் எதிரியை பிடிக்க வேண்டி வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் தனிப்படை அமைத்து மாவட்ட காவல் அலுவலகம் சென்றேன். 11.12.2021 ம் தேதி என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்புமும் இல்லை என்றால் சரியல்ல. நான்

தயார் செய்த பொய்யான  முதல் தகவல் அறிக்கையில் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை 7 மற்றும் 8 எதிரிகள் தரப்பில்.**

1 முதல் 5 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 131/2023 Crime No. 134/2021 Station Kelamangalam PS

| Name | Lw 10/Pw4/ Babu | Village | |
|---|---|---|---|
| Father Name | Kuppan | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**05.08.2025.**

**1, 4, 5, 7, மற்றும் 8 வது எதிரிகள் ஆஜர் . 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. (6 வது எதிரி இறந்துவிட்டார்) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கெலமங்கலம் அண்ணாநகரில் குடியிருந்து தொழில் செய்து வருகிறேன். நானும் குருராஜ் உம் சொந்தவேலையாக தேன்கனிக்கோட்டை சென்று கொண்டிருந்தபோது அப்போது பேளுர் பஸ்டாப் அருகில் காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்துகொண்டிருந்தார். லேப்டாப்பில் டைப் செய்து கொண்டிருந்தார்கள். மதுகுமாரை விசாரித்துகொண்டிருந்தார்கள். விசாரணை செய்தபோது அவரிடம் என்ன இருக்கிறது என்று கேட்டு அவரிடம் இருந்த பணம் ரூ.4000 எடுத்துகொடுத்தார். பார்ம் ஒன்று டைப் செய்து கொடுத்து என்னையும் குருராஜையும் கையெழுத்துபோட சொன்னார்கள் நாங்கள் போட்டோம். என்ன விசயம் என்று கேட்டபோது செந்தில் நகர் முருகன் வீட்டில் நடந்த சம்பவம் பற்றி விசாரித்து கொண்டிருந்ததாகவும், அதற்காக தான் மதுகுமாரை விசாரித்து வாக்குமூலம் பெற்றார். அந்த வாக்குமூலத்தில் நானும் குருராஜியும் சாட்சி கையெழுத்துபோட்டோம் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த சாட்சி கையெழுத்து மட்டும். **அ.த.சா.ஆ.8** ஆகும். பணம் எடுத்து கொடுத்ததை நானும் குருராஜியும் பார்த்தோம். அவரது பாக்கெட்டில் இருந்து ரூ.4000 எடுத்து கொடுத்தார். நான் கையெழுத்துபோட்டேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த சாட்சி கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.9** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை 1 முதல் 5 எதிரிகள் தரப்பில்**

மதுகுமார் எந்த ஊரை சேந்தவர் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரி மதுகுமார் எந்த மொழியில் போலீசாரிடம் சொல்லிகொண்டிருந்தார் என்றால் கன்னடமொழியில் சொல்லிகொண்டிருந்தார். எங்கு ஒப்புதல் வாக்குமூலம் பிரின்ட் எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரின்ட் எடுத்துகொடுத்து கையெழுத்துபோட சொன்னார்கள் போட்டேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை 7 மற்றும் 8 எதிரிகள் தரப்பில்.**

1 முதல் 5 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.